VNR12T

விருதுநகர் மாவட்டம்
அரையாண்டுத் தேர்வு -டிசம்பர் 2024

வகுப்பு – 12

மதிப்பெண்கள் : 90 பொதுத்தமிழ் நேரம் : 15 + 3.00 மணி

பகுதி – I

பிரிவு – 1 14 X 1 = 14

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள் சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ..........
   அ) நிதியமும் சுங்கமும் ஆ) மன்றங்களும் அவைகளும்
   இ) திருமணமும் குடும்பமும் ஈ) அறவோர், துறவோர
2. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கி சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது
   அ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது
   ஆ) பசுமைக் குடில் வாயுக்கள் அதிகமாகிறது
   இ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடு தேவையாகிறது
   ஈ) காலநிலை மாறுபடுகிறது
3. கருத்து 1: இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய் , செயப்படுபொருள், பயனிலை என்று வருவதே மரபு.
   கருத்து 2: தொடரமைப்பு சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1சரி , 2 தவறு
4. நடுங்கும்படியான துன்பம் இல்லாதவர்
   அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக் கொள்ளக் கூடியவர்
   ஆ) மனத்திட்பம் உடையவர் இ) அரசரைச் சார்ந்து வாழ்கின்றவர்
   ஈ) சூதாடுமிடத்தில் காலம் கழிப்பவர்
5. ஆர்ப்பரிக்கும் கடல்
   அதன் அடித்தளம்
   மௌனம், மகா மௌனம் - அடிகள் புலப்படுத்துவது
   அ) நிறைகுடம்நீர்த்தழும்பல் இல் ஆ) புற அசைவுகள் அகத்தினை அசைக்க இயலாது
   இ) குறைகுடம் கூத்தாடும் ஈ) இரைச்சல்
6. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல அது நம்பிக்கை மையம் - காரணம் -
   அ ) நேரடி மறைமுக வேலை வாய்ப்புகளின் களம்
   ஆ) மென்பொருள் வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு
   இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை ஈ) அ , ஆ , இ அனைத்தும்
7. வெண்பாவிற்குரிய ஓசை :
   அ) துள்ளலோசை ஆ) தூங்கலோசை இ) செப்பலோசை ஈ) அகவலோசை
8. வையகமும் வானகமும் ஆற்றலரிது - எதற்கு?
   அ) காலத்தினால் செய்த நன்றி ஆ) பயன் தூக்கார் செய்த உதவி
   இ) தினைத்துணை நன்றி ஈ) செய்யாமல் செய்த உதவி

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



10. குடிமக்கள் காப்பியம் என்று அழைக்கப்படும் நூல்
அ) கம்பராமாயணம் ஆ) வளையாபதி இ) சிலப்பதிகாரம் ஈ) திருக்குறள்
11. இலாத - என்ற சொல்லின் இலக்கண குறிப்பு. அ) வினையெச்சம்
ஆ) பண்புத்தொகை இ) வினையாலணையும் பெயர் ஈ) இடைக்குறை
12. குமணன் ஆட்சி செய்த பகுதி
அ) கொல்லிமலை ஆ) முதிரமலை இ) பொதியமலை ஈ) அகத்தியர்மலை
13. நான் வெற்று வெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்தி சுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது.
அ) தமது அடையாளத்தை ஆ) தமது குடும்பத்தை
இ) தமது படைப்புகளை ஈ) தமது விட்டு முகவரியை
14. அதிசய மலரின் புன்னகை உணர்த்துவது
அ) அச்சம் ஆ) புகழ் இ) நம்பிக்கை ஈ) பெருமிதம்

## பகுதி - II

### பிரிவு – 1 3 x 2 = 6

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

15. இடையீடு - எவற்றைக் குறியீடாக குறிப்பிடுகிறது?
16. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவன் உரைப்பன யாவை?
17. ".மூச்சு நின்று விட்டால் பேச்சும் அடங்கும் " - கவிதைக்குப் பொருத்தமான பழமொழி ஒன்றை எழுதுக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர் ?

### பிரிவு - 2 2 x 2 = 4

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. "ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் " - என்னும் முழக்கத்தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?
20. கீழ்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை ?

### பிரிவு - 3 7 x 2 = 14

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக..*
ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் , உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.
23. *உவமைத் தொடரைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.*
அ) அச்சாணி இல்லாத தேர் போல ஆ) தாமரை இலை நீர்போல
24. *தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.*
அ) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்.
ஆ) எங்கள் ஊரில் நூலக கட்டிடம் கட்ட அறசு நிதி ஒதுக்கியது.
25. *விடைக்கேற்ற வினா அமைக்கவும்.*
அ) 1856 - இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் ராயபுரத்தில் அமைக்கப்பட்டது.
ஆ)சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினை சீர் செய்யவும் பாதுகாப்பாய் பயணிக்கவும் உதவுகின்றன.
26. *தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.*

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அ) வாழைக்காட்டில் குயில்கள் அலறிக் கொண்டும் காக்கைகள் கூவிக் கொண்டும் இருந்தன.

ஆ) ஆட்டுத் தொழுவத்தைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்து இருந்தன.

27. *பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.* கான் - காண்

28. *ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.*

அ) தனியாழி ஆ) பூம்பாவாய்

29. *ஏதேனும் ஒன்றுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.*

அ) விளங்கி ஆ) கண்டான்

30. *ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.*

அ) Lobby ஆ) Allegation

## பகுதி - III

### பிரிவு – 1 2 x 4 = 8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31. சடாயுவைத் தந்தையாக ஏற்று , இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

32. எங்கிருந்தோ வருகிறது வண்ணத்துப்பூச்சியொன்று
பறவைகளும் வரக் கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. இல்வாழ்க்கை சிறப்புற அறநெறியோடு வாழ்தலின் முக்கியத்துவத்தை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

34. " செம்பருதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம் " - தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

### பிரிவு- 2 2 x 4 = 8

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

35. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.

36. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

37. மணலில் எழுதியது முதல் தற்காலம்வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

38. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

### பிரிவு - 3 3 x 4 = 12

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

39. நிரல்நிறை அணி **( அல்லது )** சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40. **கீழ்க்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக்கருத்தை எழுதி , ஏதேனும் மூன்று நயங்களைப் பாராட்டுக.**

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலரோடு பேசுவேன் !
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன்.

- நா . காமராசன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, நான்கு வினாக்களை உருவாக்குக .

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி , குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது . மனதின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர் ; மாணவராகவும் உள்ளனர் . மொழியை வளர்ப்பவரும் மக்களே ; மொழியால் வளர்ப்பவரும் மக்களே.

42. பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்.

( அல்லது )

முயற்சி திருவினையாக்கும்.

43. தமிழாக்கம் தருக.

Popular as the " Cultural Capital " of India, Tamilnadu is Extremely well - known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well - known and outstanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor.

## பகுதி - IV

இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. 3 X 6 = 18

44. அ ) திருக்குறள் ஒரு வாழ்வியல் இலக்கியம் - நிறுவுக.

( அல்லது )

ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க .

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பில் இருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

( அல்லது )

ஆ) திரைப்படத்துறை என்பது ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலா? அல்லது கலைகளின் சங்கமமா? உங்கள் பார்வையைக் கட்டுரையாக்குக .

46. அ) உரிமைத்தாகம் கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் ........... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

( அல்லது )

ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

## பகுதி – V

4 + 2 = 6

47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.

அ. " பாதகர் குழுமிச் சொற்ற...." - எனத் தொடங்கும் இரட்சண்ய யாத்திரிகப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) " அது" - என முடியும் குறள்.

\- - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com